# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 150 | வியாழக்கிழமை Thursday | 27.08.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# மேட்டூர் அணையை திறக்கும் முதலமைச்சர் விஜய்?

## காவிரி டெல்டா பாசனத்திற்காக நீர் திறக்க திட்டம்



சென்னை: காவிரி டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையை திறந்து வைக்க தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் நாளை மறுநாள் மேட்டூர் செல்ல உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேட்டூர் அணையில் இருந்து ஆண்டுதோறும் ஜூன் 12ஆம் தேதி காவிரி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர்திறப்பதுவழக்கம். இதன்மூலம் சேலம், ஈரோடு, நாமக்கல், திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர் உள்ளிட்ட 12 மாவட்டங்களில் சுமார் 17 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். ஆனால், இந்த ஆண்டு போதிய நீர் இருப்பு இல்லாததால், கடந்த ஜூன் 12ஆம் தேதி மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படவில்லை.

தற்போது காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து, அணையின் நீர்மட்டம் 88 அடியை எட்டியுள்ளது. விரைவில் 90 அடியை எட்டும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், அணை திறப்பு குறித்து சட்டப்பேரவையில் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த நீர்வளத்துறை அமைச்சர் என்.ஆனந்த், விரைவில் நல்ல செய்தி அறிவிக்கப்படும் என தெரிவித்திருந்தார். முதலமைச்சர் விஜய் மேட்டூர் அணைக்கு வந்து காவிரி டெல்டா பாசனத்திற்காக தண்ணீர் திறந்து வைக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதனையடுத்து முன்னேற்பாடாக சேலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நேற்று மேட்டூர் அணையில் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது அணையின் வலது கரை, மேல்மட்ட மதகில் மின் விசையை இயக்கும் பகுதி உள்ளிட்ட இடங்களை பார்வையிட்டு, பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது நீர்வளத்துறை செயற்பொறியாளர், உதவிப் பொறியாளர்கள், டிஎஸ்பி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் காலை விநாடிக்கு 13,415 கன அடி நீர் வந்த நிலையில், அன்று மாலையில் 12,231 கன அடியாக சரிந்தது. இதனைத்தொடர்ந்து, நேற்று காலை 12,534 கன அடியாக பதிவான நீர்வரத்து, நேற்று மாலை 10,405 கனஅடியாககுறைந்தது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 2,000 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையில் இருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவைவிட நீர்வரத்து அதிகமாக இருப்பதால், அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

தற்போது மேட்டூர் அணையின் நீர்மட்டம் 88.84 அடியாகவும், நீர் இருப்பு 51.33 டிஎம்சியாகவும் உள்ளது. நீர்மட்டம் 90 அடியை நெருங்கி வரும் நிலையில், காவிரி டெல்டா பாசனத்திற்கான தண்ணீர் திறப்பு குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தமிழ் வழியில் படித்தவர்களுக்கு அரசுப்பணிகளில் முன்னுரிமை

## சட்ட திருத்தத்திற்கு ஆளுநர் ஆர்லேகர் ஒப்புதல்



சென்னை: தமிழ் வழியில் படித்தவர்களுக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை அளிக்கும் சட்டத் திருத்தத்திற்கு தமிழ்நாடு ஆளுநர் ஒப்புதல் அளித்துள்ளார்.

தமிழ்வழியில்படித்தவர்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணிகளில் முன்னுரிமை அளிக்கும் வகையில் 20சதவீதம் நேரடி பணி நியமனம் செய்வதற்கான சட்டம் 2010 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. இந்த சட்டத்தின் அடிப்படையில் ஏற்கனவே அரசு பணியில் இருந்து கொண்டே, வேறு அரசு வேலைக்கு விண்ணப்பித்திருக்கிறாரா? என்பதை ஆராயாமல், தமிழ் வழிக் கல்வி என்பதன் அடிப்படையிலேயே அரசுப் பணிகளில் முன்னுரிமை வழங்கப்பட்டு வந்தது.

இதனை தடுக்கும் பொருட்டு, ஏற்கனவே அரசுப் பணிகளில் உள்ளவர்கள் தமிழ் வழியில் பயின்றவர்கள் என்ற அடிப்படையில் முன்னுரிமைபெற தகுதியற்றவர்கள் என சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதனையடுத்து, முழுமையாக தமிழ் வழியில் பயின்று, புதிதாக அரசுப்பணிகளில் சேருவோருக்கு 20 சதவீதம் முன்னுரிமை அடிப்படையில், நேரடி பணி நியமனம் வழங்கும் சட்ட திருத்த மசோதாவானது கடந்த ஆண்டு சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு, ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. தற்போது, இந்த சட்ட திருத்தத்திற்கு ஆளுநர் அர்லேகர் ஒப்புதல் அளித்துள்ளார்.

திருத்தப்பட்ட சட்டத்தின் படி, அரசுப் பணிகளில் தமிழ் வழியில் படித்தவர்களுக்காக ஒதுக்கப்படும் முன்னுரிமை காலிப்பணியிடத்தில் ஒருவர் ஏற்கனவே முன்னுரிமை அடிப்படையில் நியமனம் பெற்றிருந்தால், மீண்டும் அதே வகையான முன்னுரிமை காலிப்பணியிடங்களுக்கு போட்டியிட முடியாது.

இதன் மூலம், தமிழ் வழியில் படித்தவர்களுக்கான முன்னுரிமை சலுகையை ஒருமுறை பயன்படுத்தி அரசுப் பணியில் சேர்ந்தவர்கள், அதே முன்னுரிமையை மீண்டும் பயன்படுத்துவதற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

எனினும், அதிக ஊதிய நிலை கொண்ட பதவிக்கு இந்தக் கட்டுப்பாடு பொருந்தாது என சட்டத்தில் குறிப்பிடப்ப ட்டுள்ளது. அதாவது, ஏற்கனவே முன்னுரிமை அடிப்படையில் நியமனம் பெற்ற ஒருவர், அதை விட அதிக ஊதிய நிலை கொண்ட பதவிக்கானமுன்னுரிமை காலிப்பணியிடத்தில் போட்டியிடலாம்.

மேலும், இந்த புதிய விதி, சட்டத்திருத்தம் வெளியிடப்படுவதற்கு முன்பே அறிவிக்கப்பட்ட முன்னுரிமை காலிப்பணியிடங்களுக்கு பொருந்தாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, சட்டத்திருத்தம் வெளியாவதற்கு முன்பாக அறிவிக்கப்பட்ட காலிப்பணியிடங்களுக்கான நடவடிக்கைகள் ஏற்கனவே நடைமுறையில் இருந்த விதிகளின்படியே மேற்கொள்ளப்படும்.

இதனிடையே, 2010-ஆம் ஆண்டு செப்டம்பர் 7-ஆம் தேதி முதல், இந்தத்திருத்தச்சட்டம் அரசிதழில் வெளியிடப்படும் நாள் வரையிலான காலகட்டத்தில் முன்னுரிமை காலிப்பணியிடங்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட அறிவிப்புகள், செய்யப்பட்ட நியமனங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு சட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட முன்னுரிமை நியமனங்கள் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளுக்கு சட்டரீதியான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 'நேரடி நியமனம்' என்பதற்கான வரையறையிலும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, நடைமுறையில் உள்ள விதிகள் மற்றும் உத்தரவுகளுக்கு ஏற்ப, திறந்த போட்டித் தேர்வு, நேர்காணல் அல்லது இரண்டின் மூலமாக ஒருவர் அரசுப் பணியில் நியமிக்கப்படுவது நேரடி நியமனம் என தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

# நேபாளத்தில் திடீர் வெள்ளம்: தமிழர்கள் உள்பட 400க்கும் மேற்பட்ட இந்தியர்கள் தவிப்பு



நேபாளத்தின் வடக்கு ராசுவா பகுதியில் திடீர் பெருவெள்ளம் ஏற்பட்டது. இதில் தமிழர்கள் உள்பட 400க்கும் மேற்பட்ட இந்தியர்கள் சிக்கியுள்ளதாக திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இந்த வெள்ளத்தில் 8 பேர் உயிரிழந்ததாக கூறப்படுகிறது.

வெள்ளம் பாதித்த பகுதிகளில் மீட்புப் பணிகள் ஹெலிகாப்டர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும், நீர்மட்டம் அதிகமாக இருப்பதால் சில பகுதிகளில் ஹெலிகாப்டர்களை தரையிறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், நேபாளத்துக்கு புனிதப் பயணம் சென்ற தமிழகத்தைச் சேர்ந்த 57 பேர் ராசுவா மாவட்டத்தின் திமுர் பகுதியில் சிக்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இவர்கள் சென்னை, கும்பகோணம் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்தவர்கள் எனவும் கூறப்படுகிறது. இந்த நிலையில், கும்பகோணத்தை சேர்ந்த 22 தமிழர்கள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. வெள்ளத்தில் இருந்து தப்பியவர்கள் நேபாள ராணுவ முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மேலும், வெள்ளத்தில் சிக்கி இருக்கும் தமிழர்களை மீட்க வெளிநாட்டு வாழ் தமிழர்கள் நலத்துறை தீவிரம் காட்டி வருகிறது. இந்தநிலையில், 400க்கும் மேற்பட்ட இந்தியர்கள் இந்த வெள்ளத்தில் சிக்கியுள்ளதாக அதிர்ச்சிகரமான தகவல் வெளியாகி உள்ளது.

இந்த வெள்ளத்தில், சுமார் 19 பாலங்கள், 40 கிலோமீட்டர் சாலைகள், 200 வாகனங்கள் நீரில் அடித்துச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

### உதவி எண்கள் அறிவிப்பு

இந்த நிலையில் தமிழக அரசு உதவி எண்களை அறிவித்துள்ளது. நேபாளம் வெள்ளம் தொடர்பான உதவிக்கு 1800 309 3793 என்ற கட்டணமில்லாத எண்ணை தொடர்பு கொள்ளலாம் எனவும் தொடர்புக்கு 80690 09901 மற்றும் மிஸ்டு கால் தர 080690 09900 ஆகிய உதவி எண்களை தமிழக அரசு அறிவித்துள்ளது.

நேபாள சுற்றுலா வாரியம் வெளியிட்டுள்ள முதற்கட்ட அறிக்கையில், "சுற்றுலா மற்றும் பயண நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட முதற்கட்ட தகவலின்படி, மொத்தம் 384 பயணிகள் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் 291 வெளிநாட்டினரும், 93 நேபாள நாட்டினரும் அடங்குவர்" என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், உதவி எண்களையும் நேபாள சுற்றுலா வாரியம் வெளியிட்டுள்ளது.

அவசர உதவி எண்: 1234 அவசரத் தொடர்பு எண் (Hotline): 1144

சுற்றுலாப் பயணிகள் காவல் பிரிவு: 9851289445


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



இந்திய குடியரசு துணைத்தலைவர் C.P.ராதாகிருஷ்ணன் 29.08.2026 அன்று ஈரோடு கொங்கு பொறியியல் கல்லூரி நிறுவனர் தினவிழாவிற்கு வருகை தரவுள்ளதை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்துமாவட்டஆட்சியர்அலுவலககூட்டரங்கில்மாவட்டஆட்சித்தலைவர்ச.கந்தசாமி,தலைமையில்அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் (25.08.2026) அன்று நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி , மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.

## சுரண்டை நகராட்சி ஆணையாளருடன் SDPI கட்சி சுரண்டை நகர நிர்வாகிகள் சந்திப்பு



தென்காசி தெற்கு மாவட்டம் எஸ்டிபிஐ கட்சி சுரண்டை நகர நிர்வாகிகள் சார்பில், சுரண்டை நகரத் தலைவர் ஜாகிர் உசேன் தலைமையில் நகர செயலாளர் அமல்ராஜ், சுரண்டை நகர IT Wing ஒருங்கிணைப்பாளர் சாகுல்ஹமீது, ஜெய்லானி, அக்பர், முகமது பாரித்,பாஞ்ச்பீர், உள்பட நிர்வாகிகள் நகராட்சி ஆணையாளர் திரு.ஆனந்த் அவர்களை நேரில் சந்தித்து இன்று 24/08/26 திங்கள் கிழமை மனு அளித்தனர்.

சுரண்டை நகர பகுதிகளில் தெரு நாய்களின் தொல்லை மற்றும் கொசுக்களின் தொல்லை அதிகமாக இருப்பதினால் பொதுமக்கள் பெரிதும் சிரமத்திற்கு ஆளாவது மட்டுமல்லாமல், தொற்று நோய்க் கிருமிகளால் பெரிதும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

டெங்கு காய்ச்சல் பரவி வருவதால் சுரண்டை நகராட்சி சுகாதார பணியாளர்கள் கொசுவை ஒழிப்பதற்காகவும்,

கழிவுநீர் ஓடைகளில் தங்கியுள்ள குப்பை மேடுகளை அகற்றி கிருமிகள் பரவுவதை தடுக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டி நகர SDPI கட்சி சார்பில் கோரிக்கை மனு வழங்கப்பட்டது.

கோரிக்கை மனுவை மனுவை பெற்றுக் கொண்ட ஆணையாளர்கள் அவர்கள் உடனடியாக தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதிமொழி கூறினார்கள்.

## கடையத்தில் தென்காசி தெற்கு மாவட்ட தவெக சார்பில் 100 நாள் சாதனை விளக்க பொதுக்கூட்டம் - ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு



தென்காசி தெற்கு மாவட்ட தமிழக வெற்றிக் கழகம் சார்பில் தமிழக அரசின் 100 நாள் சாதனை விளக்க பொதுக்கூட்டம் கடையத்தில் நடைபெற்றது.

தமிழக வெற்றிக் கழகத் தலைவர் மற்றும் தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் தலைமையிலான அரசு பொறுப்பேற்று 100 நாட்கள் நிறைவடைந்ததையொட்டி, அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் விளக்கும் வகையில் தமிழகம் முழுவதும் பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அதன்படி, தென்காசி தெற்கு மாவட்ட தவெக சார்பில் கடையத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் டி.பி.வி.வி. விபின் சக்கரவர்த்தி தலைமை வகித்து, தமிழக அரசின் 100 நாள் சாதனைகள் குறித்து விளக்கிப் பேசினார்.

கூட்டத்தில் கடையம் வடக்கு ஒன்றிய தவெக செயலாளர் லெச்சிய காந்தன், தெற்கு மாவட்ட இணைச் செயலாளர் கிரிப்சன், மாவட்ட துணைச் செயலாளர் தயாள் சரண், மேற்கு ஒன்றிய செயலாளர் சங்கர், மாவட்ட பயிற்சிப்பாசறை அணி அமைப்பாளர் கேபிரியல், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் முத்துலெட்சுமி, உள்ளிட்ட மாவட்ட மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் ஆயிரக்கணக்கான தவெக தொண்டர்கள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### அச்சிறுப்பாக்கம் அருகே

## காட்டுக்கரணை கிராமத்தில் துரொபதி அம்மனுக்கு திருக்கல்யாணம்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அச்சிறுப்பாக அருகே உள்ள காட்டுக்கரணை கிராமத்தில் எழுந்தருளி அருள் பாலிக்கும் ஸ்ரீ தர்மராஜா என்கிற துரோபதி அம்மன் கோயில் அமைந்துள்ளது இக்கோவில் திருவிழா 26 ஆண்டுகளுக்குப் பிறகு ஊர் பொதுமக்கள் கலந்து ஆசீர் ஆலோசனை செய்து

கடந்த 17ஆம் தேதி கொடியேற்றத்துடன் காப்பு கட்டுதல் நிகழ்ச்சி நடைபெற்றது அதனை தொடர்ந்து அம்மனுக்கு அபிஷேகங்கள் ஆராதனைகள் மகாபாரத சொற்பொழிவும் தினமும் நடைபெற்றது இதனை தொடர்ந்து 26 ஆம் தேதியான நேற்று காலை 10.30 மணிக்கு மேல் 12 மணிக்குள்ளாக அம்மனுக்கு திருக்கல்யாணம் செட்டியார் வகையறா சார்பில் வெகு விமர்சையாக நடைபெற்றது இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர் விழாவில் கலந்து கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது

## கோவை சாய்பாபா காலனி பகுதியில் உள்ள, ஜேகே ஹோட்டலில் ஓணம் திருவிழா கோலாகல கொண்டாட்டமாக நடைபெற்றது



கோவை, சாய்பாபா காலனியில் அமைந்துள்ள ஜேகே ஹோட்டலில், வரும் இன்று ஆகஸ்ட் 26ம் தேதி ஓணம் திருவிழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. கேரள மக்களின் பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் ஒற்றுமையை பறைசாற்றும் முக்கிய திருவிழாவான ஓணத்தை, கோயம்புத்தூர் மக்களுடன் இணைந்து கொண்டாடும் வகையில், ஜேகே ஹோட்டல் நிர்வாகம் சார்பில் பல்வேறு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. விழாவை முன்னிட்டு, பாரம்பரிய ஓணம் அலங்காரங்கள், சிறப்பு உணவு வகைகள் மற்றும் விருந்தினர்களை கவரும் வகையிலான பல்வேறு சிறப்பம்சங்கள் ஏற்பாடு செய்யப்பட்டது. குறிப்பாக, கேரளாவின் பாரம்பரிய சுவையை வெளிப்படுத்தும் வகையில் சிறப்பு ஓணம் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது

இதுகுறித்து ஜேகே ஹோட்டல் பொது மேலாளர் சக்திவேல் அவர்கள் கூறியதாவது..

ஓணம்என்பதுமகிழ்ச்சியையும், ஒற்றுமையையும், அன்பையும் பகிர்ந்து கொள்ளும் ஒரு சிறப்பான திருவிழா.

கோயம்புத்தூரில் வசிக்கும் மலையாள மக்கள் மட்டுமின்றி, அனைத்து தரப்பு மக்களும் குடும்பத்துடன் கலந்து கொண்டு ஓணம் பண்டிகையின் மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டும் என்பதே எங்களது நோக்கம்.

பாரம்பரிய ஓணம் உணவின் சுவையையும், கேரள கலாச்சாரத்தின் சிறப்பையும் அனைவருக்கும் அறிமுகப்படுத்தும் வகையில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது .விருந்தினர்களுக்கு சிறந்த உணவு,தரமான சேவை மற்றும் மறக்க முடியாத ஓணம் அனுபவத்தை வழங்குவதில் எங்கள் குழுவினர் முழு கவனம் செலுத்தி இதனை உருவாகி உள்ளதாக கூறினார்.குடும்பத்தினருடனும், நண்பர்களுடனும் இணைந்து ஓணம் பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாட விரும்புபவர்களுக்கு, இந்த விழா சிறப்பான அனுபவமாக அமைந்தது

கேரளத்தின் பாரம்பரியத்தையும், கோயம்புத்தூரின் விருந்தோம்பலையும் இணைக்கும் வகையில் நடைபெற்ற இந்த ஓணம் திருவிழா, அனைவருக்கும் மகிழ்ச்சியையும், இனிமையான நினைவுகளையும் தரும் வகையில் அமைந்தது, சாய்பாபா காலனி ஜேகே ஹோட்டலில்...

ஓணம் திருவிழா கோலாகலமாக நடைபெற்று வருகின்றது என தெரிவித்தார்.

## மரங்களில் ஆணி அடித்து விளம்பரப் பலகைகள் வைத்தால் நடவடிக்கை ஈரோடு நெடுஞ்சாலைத்துறை எச்சரிக்கை



ஈரோடு-கரூர் சாலை உட்பட தமிழ்நாட்டின் பல்வேறு நெடுஞ்சாலைகளின் ஓரத்தில் உள்ள மரங்களின் தண்டுகளில் ஆணி அடித்து, அனுமதியின்றி விளம்பரத் தட்டிகள் மற்றும் பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன. இதனால் மரங்களின் திசுக்கள் சேதமடைந்து ஆரோக்கியம் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதால், மாநிலம் முழுவதும் ஆய்வு செய்து இத்தகைய அங்கீகாரமற்ற விளம்பரத் தட்டிகளை அகற்றவும், மரங்களைச் சேதப்படுத்துவதைத் தடுக்கவும் நடவடிக்கை கோரி 'வீ த லீடர்ஸ்' தன்னார்வலர் ஈரோட்டை சார்ந்த அக்னி M.ராஜேஷ் முதலமைச்சரின் தனிப்பிரிவுக்கு மனு அளித்திருந்தார். இம்மனுவை ஏற்றுக்கொண்ட

தமிழக அரசு, ஈரோடு நெடுஞ்சாலைத்துறை (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) உதவிக்கோட்டப் பொறியாளர் அளித்துள்ள பதில் கடிதத்தில் , நெடுஞ்சாலைப் பிரிவுக்கு உட்பட்ட சாலைப் பகுதிகளில் மரங்களில் அனுமதியின்றி ஆணி அடித்து வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகைகள் தொடர்ந்து அகற்றப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.மேலும்,இனிவரும் காலங்களில் மரங்களில் ஆணி அடித்து விளம்பரங்கள் செய்வதைத் தவிர்க்கும் வகையில் விளம்பரதாரர்களுக்கு உரிய அறிவுறுத்தல்களும் எச்சரிக்கைகளும் வழங்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஈரோடு பகுதி சாலைகளில் உள்ள மரங்களில் சேதம் ஏற்படாத வகையில் ஆணிகளைப் பிடுங்கி விளம்பரத் தட்டிகளை அகற்றும் பணியை வீ த லீடர்ஸ் சார்பாக மேற்கொள்ள விருப்பதாக அக்னி M. ராஜேஷ் தெரிவித்துள்ளார்.



அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் பக்தர்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில், மதுரை மாநகர காவல் ஆணையர் திரு. S.இராஜேந்திரன், இ.கா.ப., அவர்கள் சைக்கிள் ரோந்து அலுவல் பணியை தொடங்கி வைத்தார். காவல் துணை ஆணையர் (தெற்கு) மற்றும் காவல் துணை ஆணையர் (போக்குவரத்து) ஆகியோர் உடன் இருந்தனர்.

## உழவர் அலுவலர் தொடர்பு திட்டம் 2.0க்கு பா.ஜ.க. விவசாய அணி ஆதரவு: தூத்துக்குடியில் முக்கிய தீர்மானம்



தூத்துக்குடி எட்டயபுரம் சாலையில் உள்ள தூத்துக்குடி தெற்கு மாவட்ட பாரதிய ஜனதா கட்சி தலைமை அலுவலகத்தில், பா.ஜ.க. விவசாய அணி கூட்டம் மாவட்ட தலைவர் சங்கர் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் விவசாயிகளின் நலன் சார்ந்த மூன்று முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறை சார்ந்த தகவல்கள் மற்றும் அரசு நலத்திட்டங்களை ஒருங்கிணைந்த முறையில் கொண்டு சேர்க்கும் நோக்கில் செயல்படுத்தப்படும் உழவர் அலுவலர் தொடர்பு திட்டம் 2.0-க்கு ஆதரவு தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத்திட்டத்திற்கு தமிழ்நாடு தோட்டக்கலை அலுவலர்கள் சங்க கூட்டமைப்பு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்துள்ள நிலையில், விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு திட்டத்தை முழுமையாக செயல்படுத்த வேண்டும் என கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

உழவர் அலுவலர் தொடர்பு திட்டம் 2.0 மூலம் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், வேளாண் விற்பனை உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்ந்த தகவல்களை விவசாயிகள் ஒருங்கிணைந்த முறையில் பெற முடியும். மேலும், அலுவலர்கள் விவசாயிகளின் வயல்வெளிகளுக்கே நேரடியாகச் சென்று அவர்களின் பிரச்சினைகளை அறிந்து, அரசு நலத்திட்டங்கள்மற்றும்தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குவதற்கும் இத்திட்டம் உதவிகரமாக இருக்கும்.

தமிழக அரசின் வழிகாட்டுதலின்படி,அலுவலர்களின் கிராமப்புற களப்பணிகள் மற்றும் விவசாயிகள் சந்திப்புகளை கண்காணிக்கும் வகையில் UATT 2.0 அமைப்பு செயல்பட்டு வருவதாகவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

எனவே, இத்திட்டத்தை எதிர்ப்பதற்குப் பதிலாக, நடைமுறை சிக்கல்கள் இருப்பின் அவற்றை அரசுடன் பேச்சுவார்த்தை மூலம்தீர்த்துக்கொண்டு, விவசாயிகளுக்கு நேரடியாகப் பயன் தரும் திட்டங்களை முழுமையாக செயல்படுத்த வேண்டும் எனதீர்மானிக்கப்பட்டது.

2.)பிரதமர் கிஷான் திட்டத்தில் விடுபட்ட விவசாயிகளுக்கு முகாம் பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்த நாளான செப்டம்பர் 17-ஆம் தேதியை முன்னிட்டு, பிரதமரின் கிஷான் சம்மான் நிதித் திட்டத்தின் கீழ் ஆண்டுக்கு ரூ.6,000 நிதியுதவி பெறாமல் விடுபட்டுள்ள தகுதியான விவசாயிகளை கண்டறிந்து, அவர்களைத் திட்டத்தில் இணைப்பதற்காக சிறப்பு முகாம் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் ஒவ்வொரு மாதமும் நடைபெறும் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில், பாரதிய ஜனதா கட்சியின் விவசாய அணி சார்பில் ஒருவர் தவறாமல் கலந்து கொண்டு, விவசாயிகளின் பிரச்சினைகள் மற்றும்கோரிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லவும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் விவசாய அணி மாவட்ட தலைவர் சங்கர் தலைமை தாங்கினார். துணைத்தலைவர்கள் முத்துலிங்கம், முண்டசாமி, மாவட்ட செயலாளர் ராஜ்குமார், மண்டல் தலைவர்கள் சிவந்திவேல், பேச்சிமுத்து, செந்தில்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட தலைவர் சித்ராங்கதன், மாவட்ட துணைத் தலைவர் சிவராமன் ஆகியோர் கலந்து கொண்டு, விவசாய அணி நிர்வாகிகளுக்கு பல்வேறு வழிகாட்டுதல்களை வழங்கினர்.

மேலும், விவசாயிகளின் நலனுக்காக மத்திய அரசின் திட்டங்கள் முழுமையாக சென்றடையும் வகையில், பா.ஜ.க. நிர்வாகிகள் கிராமப்புறங்களில் தீவிரமாகப் பணியாற்ற வேண்டும் என்றும் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

### கோவை பம்பு தொழிலுக்கு 2031க்குள் ரூ.50,000 கோடி வர்த்தக இலக்கு

## நாட்டின் உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்ய உற்பத்தியில் தீவிரம் காட்ட சீமா பம்புசெட் மின்மோட்டர் உற்பத்தியாளர்கள் முனைப்பு!



உலகளாவிய பம்புத் தொழிலின் சந்தை மதிப்பு சுமார் 95 பில்லியன் அமெரிக்க மதிப்பிடப்படுகின்றன. இந்தியாவின் பம்ப் உற்பத்தித் துறையில் கோயம்புத்தூர் முக்கிய மையமாக விளங்கி வருகிறது. 1952-53ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சதர்ன் இந்தியா இஞ்சினியரிங் மேனுபேக்சரர்ஸ் அசோசியேஷன், கோவை பம்புத் தொழிலின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றி வருகிறது.

இச்சங்கத்தின்,73-வது ஆண்டு பொதுக்குழு கூட்டம் கோவை பந்தயசாலையில் நடைபெற்றது. இதில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். சங்கத்தின் புதிய தலைவராக செந்தில் குமார், துணைதலைவர்களாக, அருண் ரங்கநாதன், மோகன் செந்தில் குமார் மற்றும் கார்த்திகேயன் ஆகியோர் தேர்வு செய்ய பட்டு அவர்கள் பதவியேற்று கொண்டனர். தொடர்ந்து புதிய தலைவராக தேர்வு செய்யபட்டுள்ள செந்தில்குமார் கூறியதாவது..

இச்சங்க உறுப்பினர்கள் நிறுவனங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சியின் மூலம், அடுத்த ஐந்து ஆண்டுகளில் 5 பில்லியன் அமெரிக்க டாலர், அதாவது சுமார் ரூ.50,000 கோடி வர்த்தக இலக்கை எட்டுவதற்கான தொலைநோக்கு திட்டம்வகுக்கப்பட்டுள்ளது எனவும்,

இதற்காக இறக்குமதிக்கு மாற்றாக உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பது, எம்எஸ்எம்இ நிறுவனங்களின் தொழில்நுட்ப வளர்ச்சியை மேம்படுத்துவது, மற்றும் உலகளாவிய சந்தை வாய்ப்புகளை அதிகரிப்பது உள்ளிட்ட நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப்பட உள்ளது. பம்புத் தொழிலை ட்ரஸ்ட் செக்டார் என அறிவித்து, புதிய முதலீடுகளுக்கு மானியம் மற்றும் வட்டி மானியம் உள்ளிட்ட ஆதரவு வழங்க வேண்டும் என இச்சங்கம் வலியுறுத்தியுள்ளது என்று தெரிவித்தார்.தற்போது 18சதவீதமாக உள்ள பம்புகளுக்கான ஜிஎஸ்டி வரியை 5 சதவீதமாக குறைக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது அத்துடன், இன்டஸ்ட்ரி 4.0 தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்ள ரோபாட்டிக்ஸ்,ஆட்டோமேஷன் மற்றும் நவீன உற்பத்தித் தொழில்நுட்பங்களுக்கு அரசு ஆதரவு வழங்க வேண்டும் எனவும் இச்சங்கம் தெரிவித்துள்ளது.

கோயம்புத்தூரை உலகளாவிய பம்ப் உற்பத்தி மையமாக உருவாக்கி, இந்தியாவிற்கு கணிசமான அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதே இலக்கு என இச்சங்கம் தெரிவித்துள்ளதாக கூறினார்.

## நெய்வேலியில் கொலை வழக்கில் தேடப்பட்ட குற்றவாளியை சுட்டுப்பிடித்த போலீஸ்





கடலூர்: கடலூர் மாவட்டம், நெய்வேலியில் கொலை வழக்கில் தேடப்பட்டு வந்த பிரபல ரவுடியை போலீஸார் துப்பாக்கியால் சுட்டுப்பிடி த்தனர்.

கடலூர் மாவட்டம், நெய்வேலியில் கடந்த 16-ம் தேதி இரண்டு ரவுடி கும்பல்களுக்கு இடையே நடந்த மோதலில் வடக்குத்து கிராமத்தைச் சேர்ந்த நரேஷ் குமார் (26) வெட்டிக் கொல்லப்பட்டார். போலீஸ் விசாரணையில் நெய்வேலியைச் சேர்ந்த ஆனந்தராஜ், வடக்குத்து கிராமத்தைச் சேர்ந்த கோபி ஆகியோருக்கு இடையே இருந்த முன்விரோதம் காரணமாக இந்த மோதல் ஏற்பட்டது தெரியவந்தது. இதுகுறித்து நெய்வேலி டவுன்ஷிப் போலீஸார், கோபி உள்ளிட்ட 16 பேர் மீது வழக்குப்பதிந்து 14 பேரைக் கைது செய்தனர். இந்நிலையில், முக்கிய குற்றவாளியானகோபி (31) நேற்று நெய்வேலி அருகே புலவன்குப்பம் பகுதியிலுள்ள அரசுக்குச் சொந்தமான முந்திரிக்காட்டில் பதுங்கியிருப்பதாக போலீஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதனையடுத்து இன்று அதிகாலை 3.30 மணியளவில் கோபியை போலீஸார் பிடிக்கச்சென்ற போது, கோபி போலீஸாரை அரிவாளால் தாக்கி விட்டு தப்பிக்க முயன்றதாகக்கூறப்படுகிறது. அப்போது, தற்காப்புக்காக நெய்வேலி டவுன் காவல் ஆய்வாளர் செந்தில்குமார் துப்பாக்கியால் சுட்டதில் கோபியின் வலது காலில் குண்டு பாய்ந்தது. காலில் குண்டு பாய்ந்ததால் காயமடைந்த கோபியை மீட்ட போலீஸார் சிகிச்சைக்காக கடலூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். காயமடைந்த போலீஸார் பாண்டியராஜன், விஜயலாதசோழன் ஆகியோர் என்எல்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் புலவன்குப்பம் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## கோவையில், அரசு பள்ளி மாணவ, மாணவிகளின் கனவை நினைவாக்கிய கார்ஸ் 327 நிறுவனத்தின் இயக்குனர் விஷ்ணு வேணுகோபால்!

### 36 மாணவ, மாணவியர்களை சென்னை அழைத்து செல்ல திட்டம்



கோவை அத்தப்ப கவுண்டன் புதூர் பகுதியில் ஒடை வனம் என்ற அமைப்பில் ஏராளமான கல்லூரி,பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் இளைஞர்கள் தங்களுடைய விடுமுறை நாட்களில் தங்களுடைய கிராமத்தை தூய்மையாக வைத்துக் கொள்ள பல்வேறு, தூய்மை பணிகளிலும்,மரங்கள் வளர்ப்பிலும் கடந்த சில வருடங்களாக ஈடுபட்டு வருகின்றனர். இதனால், இவர்களின் கிராமம், தற்போது சோலைவனமாக மாறி உள்ளது. இவர்களதுகிராமத்திற்கு அருகில் தான் கோவை பீளமேடு விமான நிலையம் இருப்பதால் அவ்வப்போது இவர்களை தாண்டி விமானங்களை இறங்கும்போது ஆவலோடு விமானங்களை தலைநிமிர்ந்து பார்த்துள்ளனர் ஏழை குழந்தைகள். பல நாட்களாக இவர்களும் இந்த விமானத்தில் நாமும் எப்போது பறப்போம் என்ற ஏக்கமும் அவர்களுடையே இருந்து வந்துள்ளது. இதை தன்னைச் சார்ந்த நண்பர்களிடமும் கூறிவந்துள்ளனர்.

இந்த விஷயத்தை கேள்விப்பட்ட கோவை பட்டணம் பகுதியை சேர்ந்த"கார்ஸ் 327"என்ற நிறுவன உரிமையாளர், விஷ்ணு வேணுகோபால் உடனடியாக அந்த மாணவ,மாணவிகளின் கனவை நினைவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார். அரசு பள்ளி மாணவ மாணவிகள் 36 பேரை வருகின்ற 26 ஆம் தேதி கோவையிலிருந்து விமானம் மூலம் சென்னை அழைத்துச் சென்று முக்கியமான இடங்களை சுற்றி காண்பித்து விட்டு மீண்டும் அன்று மாலை சென்னையில்இருந்துகோவை அழைத்து வரசிறப்பு ஏற்பாடுகளை செய்துள்ளார். இதற்கு உண்டான அனைத்து செலவுகளையும் அவரது நிறுவனம் சார்பில் ஏற்றுக் கொண்டுள்ளார்.இதனைகேள்விப்பட்ட அந்த மாணவ மாணவிகள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தங்களது வாழ்நாளில் எப்போது விமானத்தில் பறப்போம் என்ற அவர்களுடைய கனவை நினைவாக்கிய கார்ஸ் 327 நிறுவனர் விஷ்ணு வேணுகோபால் அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்துள்ளனர். அதேபோல ஏ ஜி புதூர் குரும்பபாளையம் பொதுமக்களும் இவருடைய சமூக பணிகளுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர். 36 பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விமான டிக்கெட் வழங்கும் நிகழ்வு ஏஜி புதூர் ஒடை வனம் பகுதியில் அந்த அமைப்பை சார்ந்த பசுமை அத்தப்ப கவுண்டன் புதூர் தங்கவேல், மரம் சண்முகம் மற்றும் நிர்வாகிகள் பெற்றுக் கொண்டனர். இந்த ஏற்பாடுகளை கார்ஸ் 327 நிறுவனத்தை சார்ந்த விஷ்ணு வேணுகோபால்மற்றும்மோகன் வேணுகோபால் ஆகியோர் செய்து இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசு கேபிளை முடக்க முயலும் தவெக.. நயினார் நாகேந்திரன் கண்டனம்



தமிழகத்தில் தவெக அரசு பொறுப்பேற்ற குறுகிய காலத்திலேயே, அரசு கேபிள் டிவி சேவை முற்றிலும் முடங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது மிகுந்த வேதனையளிக்கிறது. தனியார் மென்பொருள் நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை, அரசு முறையாகச் செலுத்தாத காரணத்தால், கடந்த ஒரு வாரமாக சர்வர் முடக்கப்பட்டு செட்டாப் பாக்ஸ்களை (Set-top boxes) ரீசார்ஜ் செய்ய முடியாமலும், புதிய இணைப்புகளைப் பெற இயலாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

ஏழை எளிய மக்கள் குறைந்த கட்டணத்தில் பயன்பெற வேண்டும் என்ற உன்னத நோக்கத்திற்காக முன்னாள் முதல்அமைச்சர் ஜெ.ஜெயலலிதாவால் தொடங்கப்பட்ட அரசு கேபிள் நிறுவனத்தை, தவெக அரசு தனது மெத்தனப் போக்கால் அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்று கொண்டிருக்கிறது. அரசு நிறுவனத்தைச் சீரழிப்பதன் மூலம், அதிகக் கட்டணம் வசூலிக்கும் பிற தனியார் நிறுவன ங்களுக்குத் தவெக அரசு மறைமுகமாகத் துணை போகிறதோ என்ற ஐயம் எழுகிறது. ஏழை, எளிய மக்கள் பயன்பெறும்படியான திட்டத்தை யார் கொண்டு வந்திருந்தாலும் அதனைத் தங்குதடையின்றித் தொடர நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே, உடனடியாக முதல்-அமைச்சர் விஜய் இப்பிரச்சினையில் தலையிட்டு,நிலுவைத்தொகையைச் செலுத்தி அரசு கேபிள் டிவி சேவையைச் சீரமைத்து, 12 லட்சம் சந்தாதாரர்களின் உரிமையையும், சிறு ஆபரேட்டர்களின் வாழ்வாதாத்தையும் பாதுகாக்க வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கரும்பு லாரியை சுற்றி வளைத்த யானைகள்; ஆசனூரில் பதிவான காட்சி



ஈரோடு:

ஈரோடு மாவட்டம் ஆசனூர் வனப்பகுதி வழியாக கரும்பு ஏற்றிச் சென்றலாரியையானைகள் சுற்றி வளைத்து, கரும்புகளை ருசித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகம் - கர்நாடகத்தை இணைக்கும் முக்கிய சாலையான ஆசனூர் வழியாக தினமும் ஏராளமான வாகனங்கள் செல்கின்றன. கர்நாடகத்தில் கரும்பு அறுவடை தொடங்கியுள்ள நிலையில்,அங்கிருந்து சத்தியமங்கலத்தில் உள்ள ஆலைகளுக்கு லாரிகளில் கரும்பு கொண்டு செல்லப்படுகிறது.

இந்நிலையில், கர்நாடகாவில் இருந்து கரும்புலோடு ஏற்றி வந்த லாரியை யானைகள் வழிமறித்து சுற்றி வளைத்தன. இதனால் அதிர்ச்சியடைந்த லாரி ஓட்டுநர் செய்வதறியாமல் நின்றார்.

சில நிமிடங்கள் லாரியில் இருந்த கரும்புகளை யானைகள் ருசித்த பின்னர் வனப்பகுதிக்குள் சென்றன. அதன்பிறகே ஓட்டுநர் லாரியை அங்கிருந்து இயக்கிச் சென்றார். இக்காட்சியை சக வாகனஓட்டிகள்வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் பதிவிட்டுள்ளனர்.

வனத்துறையினர் எச்சரிக்கை

கரும்பு லாரிகளை யானைகள் வழிமறிக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருவதால், ஓட்டுநர்கள் மிகுந்த கவனத்துடன் செல்ல வேண்டும். யானைகள் சாலையில் தென்பட்டால் மற்ற வாகன ஓட்டிகள் தொலைவில் வாகனங்களை நிறுத்தி, அவை வனத்துக்குள் சென்ற பிறகே பயணத்தை தொடர வேண்டும். மேலும், சாலையில் நடமாடும் வனவிலங்குகளுக்கு யாரும் உணவளிக்கக் கூடாது என வனத்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

# முதல் முறையாக 100% உள்நாட்டில் தயாரான ஏகே203 'ஷெர்' துப்பாக்கி சோதனை வெற்றி




அமேதி: முற்றிலும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டஏகே-203ஷெர்துப்பாக்கி வெற்றிகரமாக சோதிக்கப்பட்டுள்ளது. 'மேக் இன் இந்தியா' திட்டத்தின் கீழ் ஏகே-203 தாக்குதல் துப்பாக்கிகளை உள்நாட்டிலேயே தயாரிப்பதற்காக, உத்தர பிரதேசமாநிலம்அமேதியில் இந்தோ-ரஷ்யன் ரைபிள்ஸ் நிறுவனம் (ஐஆர்ஆர்பிஎல்) 2019-ல் நிறுவப்பட்டது.

இந்திய- ரஷ்ய கூட்டு நிறுவன ஆலையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்தத் துப்பாக்கிக்கு 'ஷெர்' என பெயரிடப்பட்டுள்ளது. இந்நிலையில், ஐஆர்ஆர்பிஎல் தலைமைச் செயல் அதிகாரி மேஜர்ஜெனரல் எஸ்.கே. சர்மா சமீபத்தில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:

எங்கள் நிறுவனத்தில் உள்ள அனைவருக்கும் இது பெருமைமிக்க தருணம்.


100% இந்திய உதிரி பாகங்கள் மற்றும் உள்ளீட்டுப் பொருட்களுடன் தயாரிக்கப்பட்ட முதல் ஏகே-203 (ஷெர்) துப்பாக்கியை வெற்றிகரமாகத் தயாரித்து சுட்டுப் பார்த்துள்ளோம்.

அடுத்தகட்டமாக, செப்டம்பர் 2026-ல் ராணுவத்தின் பரிசோதனைகளுக்காக ஒப்படைக்க, தேவையான எண்ணிக்கையிலான துப்பாக்கிகளை உருவாக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறோம். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

ஏகே-203 என்பது 7.62x39மிமீ, கலஷ்நிகோவ் தளத்தை அடிப்படையாகக் கொண்ட எரிவாயு மூலம் இயங்கும் தாக்குதல் துப்பாக்கியாகும். இது நிமிடத்துக்கு700சுற்றுகள் சுடும் திறனையும், 800 மீட்டர் வரம்பையும்கொண்டுள்ளது.

# சென்னையில் பேரிடர் காலங்களில் நிவாரண பணிகளை மேற்கொள்ள மண்டல அளவில் பொறுப்பு அமைச்சர்கள் நியமனம்

சென்னையில் வளர்ச்சிப் பணிகளை துரிதப்படுத்தவும், பேரிடர் காலங்களில்



நிவாரண பணிகள் போன்ற அவசரகால பணிகளை மேற்கொள்ளவும் 7 அமைச்சர்கள் மண்டலஅளவில்பொறுப்பு அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கான அரசாணையை தலைமைச் செயலாளர் சாய்குமார் வெளியிட்டுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

முன்னதாக வெளியிடப்பட்ட அரசாணையில் அமைச்சர்கள்மாவட்டவாரியாக பொறுப்பு அமைச்சர்களாக நியமனம் செய்யப்பட்டனர். தற்போது முதல்-அமைச்சரின் ஆணையின்படி, மேற்கண்ட மாவட்டபணிகளோடு கூடுதலாகஅமைச்சர் பெருமக்களில் சிலருக்கு சென்னை மாநகராட்சியில் உள்ள மண்டலங்களுக்கு பொறுப்பு அமைச்சர்களாக நியமனம் செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.அதன் பேரில் மண்டல வளர்ச்சிப் பணிகளை துரிதப்படுத்தவும் மற்றும் பேரிடர் காலங்களில் நிவாரணபணிகள் போன்ற அவசரகால பணிகளை கூடுதலாக மேற்கொள்ளவும், அமைச்சர்கள் மண்டலஅளவில்பொறுப்பு அமைச்சர்களாக பின்வருமாறு நியமனம் செய்யப்படுகின்றனர்.

மண்டலம் 1 (திருவொற்றியூர்), மண்டலம் 2(மணலி) - இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் ரமேஷ்

மண்டலம் 3 (மாதவரம்), மண்டலம் 4 (தண்டையார்பேட்டை) - வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் த. லோகேஷ் தமிழ்செல்வன்

மண்டலம் 5 (ராயபுரம்),மண்டலம் 6 (திரு.விகநகர்) - மருத்துவம்,மருத்துவக்கல்வி மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அருண்ராஜ்

மண்டலம் 7 (அம்பத்தூர்), மண்டலம் 8 (அண்ணாநகர்), மண்டலம்9(தேனாம்பேட்டை) - கைத்தறி துணி நூல் மற்றும் காதித் துறை அமைச்சர் விஜய் பாலாஜி

மண்டலம் 10 (கோடம்பாக்கம்), மண்டலம் 11 (வளசரவாக்கம்) - இயற்கை வளங்கள் துறை அமைச்சர் டி.கே. பிரபு

மண்டலம் 12 (ஆலந்தூர்), மண்டலம் 13 (அடையார்) - போக்குவரத்துத்துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் மண்டலம் 14 (பெருங்குடி), மண்டலம் 15(சோழிங்கநல்லூர்) - மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் விக்னேஷ்

பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்ஆதவ் அர்ஜுனா சென்னை மாவட்ட பொறுப்பு அமைச்சர் என்ற முறையில் சென்னை மாநகராட்சியில் உள்ள 15 மண்டலங்களில் உள்ள பணிகளை ஒருங்கிணைப்பார்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "கர்நாடகாவில் வந்தே மாதரம் பாடலின் முதல் இரு பத்திகள் மட்டுமே பாடப்படும்" முதலமைச்சர் டி.கே.சிவகுமார் உறுதி

பெங்களூரு: அரசு மற்றும் பொது நிகழ்ச்சிகளில் வந்தே மாதரம் பாடலின் முதல் இரண்டு பத்திகளை மட்டுமே பாடுவது என்ற காங்கிரஸ் கட்சியின் முடிவையே தனது அரசு பின்பற்றும்என்று கர்நாடக முதல்வர் டி.கே. சிவகுமார் தெரிவித்தார்.




கர்நாடகாவில் சுதந்திர தின விழாவின் போது வந்தே மாதரம் பாடல் முழுமையாகப் பாடப்பட்டது குறித்து தனியார் நிகழ்ச்சி ஒன்றில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த டி.கே.சிவகுமார், "எனது கட்சியின்கொள்கையில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். எங்கள் கட்சி என்ன முடிவு செய்துள்ளதோ, அதில் நான் உறுதியாக இருக்கிறேன். 'வந்தே மாதரம்' பாடலின் முதல் இரண்டு பத்திகளை மட்டுமே பாடுவது என்ற காங்கிரஸின் முடிவை எனது அரசு உறுதியாக பின்பற்றும். எனது கவனத்துக்கு வராமலோ அல்லது ஆளுநர் மாளிகையிலோ ந்தே மாதரம்பாடல் முழுமையாக பாடப்பட்டிருக்கலாம். ஆனால் எதிர்காலத்தில், எந்தவொரு அரசு நிகழ்ச்சியிலும், நாங்கள் ஏற்கனவே முடிவுசெய்தபடிஇரண்டு பத்திகளை மட்டுமே பாடும் நடைமுறையைப் பின்பற்றுவோம்.

இது பல்வேறு மொழிகள், கலாச்சாரங்கள் மற்றும் பிராந்திய ங்களைக் கொண்ட நாடு. நாங்கள் அனைவரையும் மதிக்கிறோம். சூரியன், நீர் அல்லது காற்றில் மதம்ஏதுமில்லை.மாற்ற முடியாது; மற்ற அனைவரும் சுவாசிக்கும் அதே காற்றைத்தான் நீங்களும் சுவாசிக்க வேண்டும், அதே நீரைத்தான் பருக வேண்டும். அப்படியிருக்க, காற்று, நீர், தாவரங்கள் அல்லது சூரியனில் மதம் ஏதேனும் உள்ளதா?." என்றார்.

அரசு மற்றும் பொது நிகழ்ச்சிகளில் வந்தேமாதரம் பாடலை கட்டாயமாக்கி மத்திய அரசு சமீபத்தில் அறிவிப்பு வெளியிட்டது. ஆனால், 'வந்தே மாதரம்' பாடலின் முதல் இரண்டு பத்திகளை மட்டுமே பாட வேண்டும் என்ற 1937-ஆம் ஆண்டின் தீர்மானத்தை காங்கிரஸ் செயற்குழு கடந்த வாரம் மீண்டும் உறுதிப்படுத்தியது. 'வந்தே மாதரம்' பாடலின் பிந்தைய வரிகளில் துர்கா, லட்சுமி மற்றும் சரஸ்வதி போன்ற இந்து பெண் தெய்வங்கள் குறிப்பிடப்படுவதாகவும், இதனால் பிற சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு இது ஏற்புடையதாக இல்லாமல் இருக்கலாம் என்று காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

# வேகமெடுக்கும் எச்1என்1 இன்ஃப்ளுயன்சா பாதிப்பு: பொதுமக்களுக்கு இந்திய மருத்துவக் கழகம் முக்கிய அறிவுரை

புதுடெல்லி: பருவமழைக் காலத்தில் பரவக்கூடியஎச்1என்1இன்ஃப்ளுயன்சா வைரஸ் பாதிப்பு (ஸ்வைன் ஃப்ளு - பன்றிக்காய்ச்சல்) இந்தியாவில் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துவரும் சூழலில்,பொது மக்கள் தாங்களாகவே ஆண்ட்டி வைரல், ஆண்ட்டி பயாடிக் மருந்துகளை உட்கொள்ள வேண்டாம் என்றும், தீவிர அறிகுறிகள் தென்பட்டால் சற்றும் தாமதிக்காமல் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும் என்றும் இந்திய மருத்துவக் கழகம் (ஐஎம்ஏ) அறிவுறுத்தியுள்ளது.




அதே வேளையில் இப்போதுபரவும்தொற்று வழக்கமான வைரஸ் தான் என்றும் இது மரபணு உருமாற்றம் கொண்டதல்ல என்பதால் மக்கள் பதற்றமடைய வேண்டாம் என்றும் தெரிவித்துள்ளது.

எச்1என்1 இன்ஃப்ளுயன்சா பாதிப்பு டெல்லியில் கணிசமாக உயர்ந்துள்ளதாக ஐஎம்ஏ கூறுகிறது. டெல்லியில் மட்டும் 1770 பேருக்கு இத்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது. மேலும், மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் மேற்குவங்கத்திலும் பாதிப்பு அதிகரித்து வருவதாக கூறும் ஐஎம்ஏ, அதன் நிமித்தமாகவே பொது மக்களுக்கு இந்த அறிவுரையை வெளியிடுவதாகவும் தெரிவித்துள்ளது.

அதே வேளையில், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சில் (ஐசிஎம்ஆர்) வெளியிட்டுள்ள அறிக்கையில், இப்போது பரவிவரும் இன்ஃப்ளுயன்சா வைரஸ்எச்1என்1வகையைச் சேர்ந்ததுதான், அதில் புதிதாக எந்த மரபணு மாற்றமும் ஏற்படவில்லை என்று உறுதி செய்துள்ளதகவலையும் ஐஎம்ஏ தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. எனவே பொதுமக்கள் பதற்றப்படாமல் தொற்று அறிகுறி இருந்தால்மருத்துவமனையை நாட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

எச்1என்1 வைரஸ் தொற்று என்பதால் மக்கள் தாங்களாகவே அஸித்ரோமைசின், அமாக்சிலின் - க்ளாவுலனேட், செஃபிக்ஸைம் அல்லது பிற ஆண்ட்டிபயாடிக் மருந்துகளை உட்கொள்ள வேண்டாம். மருந்துகங்களில் தாமாகவே இதுபோன்ற மருந்துகளை வாங்கி உட்கொண்டால் அவை உடலை பாதுகாக்கும் மைக்ரோபயோம்களை அழித்து, நுண்ணுயிர் எதிர்ப்பி எதிர்ப்பு (Antimicrobial resistance - AMR) நிலையை உருவாக்கிவிடும்.

அதேபோல், ஆண்ட்டி வைரல் மருந்துகளையும் தாமாக வாங்கி உட்கொள்ளக் கூடாது. நோயின் தீவிரத்தை மருத்துவர் பரிசோதித்து வழங்கும் மருந்துகளை மட்டுமே உட்கொள்ள வேண்டும்என்று ஐஎம்ஏ வலியுறுத்தியுள்ளது.

பாதிப்பு அறிகுறிகள்:

காய்ச்சல், சளி, இருமல், தும்மல், தலைவலி, தொண்டை வலி, வாந்தி, வயிற்றுப்போக்கு போன்ற லேசான அறிகுறிகளும், மூச்சு விடுவதில் சிரமம், நெஞ்சு வலி, மயக்கம், சளியில் ரத்தம்,சர்க்கரை நோய் அதிகமாகுதல், விரல்கள் நீல நிறமாக மாறுதல் போன்ற தீவிர அறிகுறிகள் எச்1என்1 பாதித்தோருக்கு ஏற்படலாம்.

எச்1என்1 பாதிப்பு ஏற்படாமல்தடுக்கும்முறைகள்:

காய்ச்சல் அறிகுறி உள்ளவர்கள் மற்றும் இருமல், தும்மல் இருப்பவர்களிடம் இருந்து சுமார் 1 மீட்டர் இடைவெளிவிட்டு விலகி இருத்தல் பாதுகாப்பானது.வெதுவெதுப்பான நீரில் உப்பு கலண்டு வாய் கொப்பளித்தல், வெதுவெதுப்பான நீரை குடித்தலை பின்பற்றலாம்.


பேருந்து, ரயில்களில் பயணிப்பவர்கள் மற்றும் திரையரங்கம், வணிக வளாகங்கள் எனபொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களுக்கு செல்பவர்கள் தற்காப்பு நடவடிக்கையாக முகக் கவசங்களை (மாஸ்க்) அணிந்து செல்லலாம்.

எச்1என்1 பாதிப்பை 80 சதவீதம் கைகளை சுத்தமாக கழுவாததால் தான் பரவுகிறது. எனவே, பொது இடங்களுக்குச் சென்று திரும்பும்போது 20 வினாடிகள் சோப்பு போட்டு கைகளை நன்றாக கழுவுதலையும் பின்பற்றலாம். அல்லது ஆல்கஹாலை அடிப்படையாகக் கொண்ட கிருமி நாசினிகளை கைகள் சுத்தப்படுத்த பயன்படுத்தலாம்.

பொது மக்களுக்கான இந்த வழிகாட்டுதல்களை ஐஎம்ஏ தேசியத் தலைவர் அனில்குமார் நாயக் தலைமையிலான குழு வெளியிட்டுள்ளது.

# HT Exclusive: After opening missile manufacturing to private sector, Modi govt targets 1,500km strike range

*A day after Defence Minister Rajnath Singh allowed the entry of Indian private sector into conventional missile sector using DRDO technologies, the Modi government is identifying private players for production of 1000-1500 km range Land Attack Cruise Missile (LR-LACRM) and 150-500 km range Pralay quasi-ballistic tactical missile.*



*Long Range Land Attack Cruise Missile will now be produced by Indian private companies using transfer of technology route from DRDO*

*While Request for Proposals (RFPs) have already been issued for Astra Mark I (110 km range) and Mark II (150 km range) beyond visual range air to air missiles to Indian private sector through transfer of technology route, companies like ICOMM, Hyderabad, Bharat Forge and Adani Defence Systems and Technologies Limited (ADSTL), Bharat Dynamics Limited, Bharat Electronics Limited will be involved in production of the following missiles:*

*· Next Generation Anti-Radiation Missile (100-300 km standoff range)*

*· Rudram-II, air to ground hypersonic missile with range up to 300 km.*

*· Unmanned Aerial Vehicle Launched Precision Guided Missile (ULPGM).*

*· Long Range Glide Bomb with a stand-off range of 100 km and one ton warhead.*

*· Smart Anti Airfield Weapon (SAAW, a precision glide bomb with a stand-off distance of 100 km and 80 kilogram warhead.*

*· Quick Reaction ground to air missile with a range of 25-30 km, which can engage six targets simultaneously at a height of up to 10 lkm.*

*· Very Short Range Air Defence System, shoulder fired, can engage targets at 8 km and at an altitude of 4.5 km. Used against tanks and helicopters.*

*· Naval anti-ship missile (NASM) Short Range, helicopter launched with 55 km range and a 100 kg warhead.*

*· Naval anti-ship missile Medium Range, land or ship launched, ramnge upto 350 km with a warhead exceeding 200 kg.*

*· Medium Range anti-ship missile (MRAShM) with 70 km range, supersonic, 276 kg weight, used against jets, missiles and drones.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.